செ.வெ.எண்: 824 நாள்: 01.12.2019

**உடல் உறுப்பு தானத்தில் தமிழகம் தொடர்ந்து 5 வது முறையாக முதலிடம் பெற்று சாதனை.**

**பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேச்சு.**

---

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் இன்று (01.12.2019) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் தொடர்பாக அரசை தேடி சென்று மனு கொடுத்து தீர்வு காணும் நிலையை மாற்றி பொதுமக்களின் இருப்பிடங்களுக்கே நேரடியாக சென்று பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு காணும் வகையில் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் கூட்டம் நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் பொதுமக்களை நேரடியாக சந்தித்து, கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட கோரிக்கை மனுக்களில் தகுதியுள்ள பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றையதினம் விராலிமலையில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களில் தகுதியுள்ள மனுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் வருவாய்த்துறையின் சார்பில் முதியோர் உதவித்தொகை, விலையில்லா வீட்டுமனை பட்டாக்கள், பட்டாமாறுதல், கல்வி உதவித்தொகை என மொத்தம் 644 பயனாளிகளுக்கு ரூ.84,58,150 மதிப்பீட்டிலும், வேளாண்மைத்துறையின் சார்பில் 803 பயனாளிகளுக்கு ரூ.23 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் விராலிமலை பேருந்து நிலையத்தில் ரூ.4.59 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய மேற்கூறையும், விராலிமலை பேருந்து நிலையம், கல்குடி பிரிவு சாலை உள்ளிட்ட 10 இடங்களில் தலா ரூ.5 லட்சம் என மொத்தம் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட 10 புதிய எல்.இ.டி உயர்மின் கோபுர மின்விளக்குகளும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விராலிமலை பகுதியில் 13.11.2019 அன்று பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 2,522 மனுக்கள் பெறப்பட்டு அதில் 841 மனுக்களுக்கு உடனடி தீர்வு மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 1,021 மனுக்கள் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விராலிமலை தொகுதியில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதன்படி விராலிமலை முருகன் கோவிலுக்கு வெள்ளி ரதம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், மலைமீது நேரடியாக வாகனங்கள் செல்லும் வகையில் ரூ.4.5 கோடி மதிப்பீட்டில் மலை பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் பின்னர் லிப்ட் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறையின் மிகச் சிறப்பான செயல்பாட்டால் உடல் உறுப்பு தானத்தில் தொடர்ந்து 5 வது முறையாக தமிழகம் முதலிடம் பிடித்து சாதனை புரிந்துள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்ட மக்களின் பல ஆண்டு கால கோரிக்கையான காவிரி - குண்டாறு உபரி நீர் இணைப்பு திட்டம் ரூ.7,673 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயம் செழித்து பொதுமக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றமடையும். இதேபோன்று பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இலுப்பூரில் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் திட்டத்தின் கீழ் 997 பயனாளிகளுக்கு ரூ.1,01,72,000 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் இலுப்பூர் பகுதியில் 14.11.2019 அன்று பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 4,228 கோரிக்கை மனுக்களில் 2,397 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள மனுக்கள் நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வே.சரவணன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.இரா.சின்னதம்பி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், வருவாய் கோட்டாட்சியர் டெய்சிகுமார், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தலைவர் பழனியாண்டி, வாட்டாட்சியர்கள் முருகப்பன், சதீஸ் சரவணகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரமேஷ், ரவிச்சந்திரன், சிங்காரவேலன், முன்னாள் ஒன்றியக் குழுத்தலைவர் சுப்பையா, கூட்டுறவு சங்கத்தலைவர் வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் பி.சாம்பசிவம், அரசு அலுவலர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**